MC.53/2025

08.04.2026

PW2 – ராதா க/பெ.முனியப்பன், வயது–62.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர் .

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 12.48 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –01.00 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 08.04.2026

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-

உங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் குழந்தையை பார்க்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் எவ்வளவு நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் மூன்று மாதங்கள். நீங்கள் தாக்கல் செய்த மனுவிலும் மனுதாரரும் எதிர்மனுதாரரும் மூன்று மாதங்கள் தான் சேர்ந்து வாழ்ந்ததாக சொல்லியுள்ளீர்களா என்றால் ஆமாம். மனுதாரர் எப்போதும் இன்றிருப்பது போல் தான் இருப்பார்களா என்றால் ஆமாம். மனுதாரருக்கும் எதிர்மனுதாரக்கும் எங்கு திருமணம் நடந்தது என்றால் எதிர்மனுதாரர் வீட்டில் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எவ்வளவு நகைகள் போட்டீர்கள் அது எங்குள்ளது என்றால் 5 சவரண் நகை எதிர்மனுதாரர் வீட்டில் தான் உள்ளது. திருமணத்தின்போது மனுதாரருக்கு நகைகள் எதுவும் போடவில்லை எனவும் பெண் மட்டும் தான் கொடுத்தீர்கள் எனவும் திருமண செலவை எதிர்மனுதாரரே செய்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரரிடம் சேர்ந்து வாழ தயாராக தான் உள்ளார் எனவும் நீங்கள் தான் மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மனுதாரர் ஆரம்ப காலம் முதலே மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தவரை எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து கொடுத்தீர்கள் எனவும் மனநலம் பாதிக்கப்பட்ட காரணத்தினால் தான் மனுதாரரே எவ்வித காரணமும் இன்றி எதிர்மனுதாரரை விட்டு உங்கள் வீட்டிற்கு திரும்பி விடுவார் என்றால் சரியல்ல. மனுதாரர் மூன்று மாதம் கர்பமாக இருக்கும்போது அழைத்துவந்த நீங்கள் அதன் பிறகு பலமுறை எதிர்மனுதாரர் அழைத்தும் நீங்கள் தான் மனுதாரருடன் அனுப்பி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு நிலங்கள், வீடு உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.04.08 15:28:39 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.